# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 06.09.2019 (முற்பகல்)**

**விசாரணை நடைபெற்ற இடம்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு.**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண். SA2019/D/2017**

திரு. மு. சிவசுப்பிரமணியம் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட கல்வி அலுவலர்,
மாவட்ட கல்வி அலுவலகம்,
ஈரோடு மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இன்று (06.09.2019) ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.மு.சிவசுப்பிரமணியம் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர் அவர் சார்பாக திரு. P.ஆராய்ச்சிமணி, மாவட்ட கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், மாவட்ட கல்வி அலுவலகம், ஈரோடு, ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(3)-ன் கீழ் 13.03.2017 அன்று தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மேல்முறையீட்டாளர் 01.09.2016 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனு மற்றும் 24.10.2016 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்.

3. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 01.09.2016 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், இராயபாளையம் புதூர் ஆரம்பப்பள்ளி ஆசிரியை மல்லிகாதேவி அவர்கள் கடந்த ஆண்டு பேரோடு கிராமம் செல்லப்பம்பாளையத்தில் சுமார் 15 லட்சம் ரூபாய் மதிப்பில் தனது வீட்டில் மேல்மாடியில் புதிதாக கட்டிடம் கட்ட அனுமதி பெற்றாரா மற்றும் கடந்த ஜீலை மாதம் வெளிநாடு சுற்றுப்பயணம் செய்ய அனுமதி பெற்றாரா என்றும் அவரிடம் 100 பவுன் இருப்பதாக அவருடைய கணவர் அறிக்கை (Affidavit) தாக்கல் செய்துள்ளார் அதனை அவர் கணக்கில் காட்டியுள்ளரா என்றும் அவர் பிறந்த வீட்டிலோ, புகுந்த வீட்டிலோ இவரைத் தவிர மற்றவர்களுக்கு குறிபிட்ட வருவாய் இல்லை இந்நிலையில் 12 லட்சம் மதிப்புள்ள கார் உள்ளது அதை கணக்கில் காட்டியுள்ளாரா என்ற தகவல்களை கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

4. பொதுத் தகவல் அலுவலர் எந்தத் தகவலும் வழங்கவில்லை என தெரிவித்து, 24.10.2016 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் எந்தத் தகவலும் வழங்கவில்லை என தெரிவித்து, 13.03.2017 தேதியிட்டு பிரிவு 19(3)ன் கீழ், இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்து, தான் கோரிய இனங்களுக்கான தகவல்களை பெற்றுத்தருமாறு ஆணையத்தை கேட்டுள்ளார். அம்மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5. விசாரணையின்போது ஆஜரான மேல்முறையீட்டாளர் தன்னுடைய மனு தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் முதல் மேல்முறையீட்டு அலுவலர் இதுவரைக்கும் தனக்கு எந்தவிதமான தகவல்களும் வழங்கவில்லை என்றும், தான் கோரிய இனங்களுக்கான தகவல்களைப் பெற்றுத்தருமாறும் ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

6. விசாரணையின்போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் தனது 01.09.2016 தேதியிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள தகவலான, மல்லிகாதேவி என்பதற்கு பதிலாக தவறாக மல்லிகாமணி என்றும் அவர் இராயபாளையம் புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பணியாற்றி வருகிறார் எனவும் தெரிவித்திருந்தார். மேலும், மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் அரசுப் பணியாளரின் தனிப்பட்ட தகவல்கள் என்றும், எனவே தகவல் அறியும் உரிமைச்சட்டம் 8(1)(j)ன் படி வழங்க இயலாது எனவும் ஆணையத்திடம் எடுத்துரைத்து, அதன் தொடர்பான ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

7. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்ததில் ஆணையம் கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- **மேல்முறையீட்டாளர் கேட்டுள்ள தகவல்கள் உரிய காலத்திற்குள் வழங்கவில்லை என ஆணையம் கருதுகிறது. மேல்முறையீட்டாளருக்கு ஏறத்தாழ 1 வருட காலத்திற்கு மேலாக பதில் அளிக்காத பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் ரூ10,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார**

காலத்திற்குள் நேரிடையாகவோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.

- மேல்முறையீட்டாளர் தனது தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் கோரியுள்ள தகவல்களில், அலுவலக இருப்பிலுள்ள தகவல்களை மட்டும் இவ்வாணை கிடைக்கப்பெற்ற *7 தினங்களுக்குள்* ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)ன் படி கட்டணமின்றி மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு இவ்வழக்கின் மீதான விசாரணை இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது.

(ஒம்/- **ச.த. தமிழ்குமார்)**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA2019/D/2017**

**பெறுநர்**
பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட கல்வி அலுவலர்,
மாவட்ட கல்வி அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்
திரு மு.சிவசுப்பிரமணியன்,
எண். 5/9, செல்லாம்பாளையம்,
சித்தோடு - 638 102, ஈரோடு மாவட்டம்.

Copy to: Judgement File.
Spare/ TG/PC-19/09/2019